# மதுரமுரளி

Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

Regd. No. TN / PMG (CCR) / 521 / 03 - 05

Licensed to Post without prepayment WPP No. 319 / 03-05

| வேணு : 10 | ஆகஸ்ட் - 2004 | கானம் : 1 |
|---|---|---|


ஸ்ரீ ஹரி:


பகவான் யோகிராம்சுரத்குமார் அதிஷ்டான நூதன ஆலய மஹாகும்பாபிஷேகம்

இடம் : பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம், திருவண்ணாமலை

தேதி : 27.06.2004



யாகசாலையில் பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்களின் திருவுருவப்படம்



அதிஷ்டான நூதன ஆலயம்



பகவான் யோகிராம்சுரத்குமார் அதிஷ்டானம் – மூலவர், உத்ஸவர்


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 83. ✆ 2371 0110 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. **Website : www.madhuramurali.org; e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org**


ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




| வேணு : 10 | ஆகஸ்ட் - 2004 | கானம் : 1 |
|---|---|---|


www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் இரண்டாவது ப்ரதிஷ்டா தினத்தன்று,
“ஹரே ராம....” மஹாமந்திரம் ப்ரசாரம் செய்யும் நாமபிக்ஷா கேந்த்ராவினருக்கு
ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, ப்ரஸாதமும், Mementoவும் வழங்கினார்கள்.
தேதி : 26.01.2004 – இடம் : மதுராபுரி, மஹாரண்யம்.



ஈரோடு ஸ்ரீ வெங்கடரமணி அய்யர்



புதுக்கோட்டை ஸ்ரீ சுந்தரேச அய்யர்

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் தரிசனம் நேரம் / இடம் பற்றிய முக்கிய அறிவிப்பு !

- ★ ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, சிலகாலம் தனிமையில் மௌனம், ஜபம் என்று இருக்க தீர்மானித்திருப்பதால், அதுவரையில் எந்த ஒரு பொது நிகழ்ச்சியையும் ஒப்புகொள்வதற்கில்லை.

- ★ சென்னை ப்ரேமிகபவனத்தில் பராமரிப்பு வேலைகள் நடைபெறுவதால் அங்கு அடுத்த சில மாதங்களுக்கு ஸத்ஸங்கம் நடைபெறாது. அதனால், பக்தகோடிகள் ப்ரேமிகபவனத்தை நேரில் அணுக வேண்டாம்.

- ★ போன் : 044 – 23710110 என்னும் தொலைபேசி எண்ணைத் தொடர்புகொண்டு மதுரமுரளி, மிஷன் வெளியீடுகள் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

- ★ மதுரமுரளி விஷயமாகவும், மிஷன் வெளியீடுகள், VCD, CD, கேசட்கள் விஷயமாகவும் e-mail அனுப்ப விரும்புபவர்கள், "publications@madhuramurali.org" என்ற e-mail ID-க்கு அனுப்பவும்.


நமது மிஷனிற்கு கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

"Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji**"
**Guruji Sri Muralidhara Swamigal Mission**
Premika Bhavanam, New No. 2, (Old No. 24), Netaji Nagar,
Jafferkhanpet, Chennai - 600 083.
e-mail : contact@madhuramurali.org


மங்களானி பவந்து

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 10 ஆகஸ்ட் 2004 கானம் : 1

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பெரியாழ்வார் பாசுரங்கள் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 105 | 4 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 86 | 8 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 76 | 10 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை -80 | 15 |
| 7. | மாலே மணிவண்ணா - 23 | 19 |
| 8. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 23 | 25 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 107 | 29 |


*க்ருஷ்ணாய வாசுதேவாய ஹரயே பரமாத்மனே*
*ப்ரணத க்லேஸநாசாய கோவிந்தாய நமோ நம:*

कृष्णाय वासुदेवाय हरये परमात्मने ।
प्रणत क्लेशनाशाय गोविन्दाय नमो नमः ।।

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ பெரியாழ்வார் பாசுரங்கள்

பெரியாழ்வார் திருமொழியில், ''நெய்குடத்தை'' என்ற இந்த பத்து பாசுரங்கள் ஒரு கவசம் போன்றது. இதை தினமும் ஸேவிப்பதால் எல்லா வியாதிகளும், மனோவியாதிகளும், பூதப்பிரேத, பிசாச சேஷ்டைகளும் விலகும்.

**ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்**

## 2-ஆம் திருமொழி - நெய்க்குடத்தை

*★நெய்க்குடத்தைப்பற்றி ஏறும்எறும்புக்ள்போல்நிரந்து ★ எங்கும்*
*கைக்கொண்டுநிற்கின்றநோய்காள்! காலம்பெற உய்யப்போமின்★*
*மெய்க்கொண்டுவந்துபுகுந்து வேதப்பிரானார்கிடந்தார்★*
*பைக்கொண்டபாம்பணையோடும் பண்டன்றுபட்டினம்காப்பே. (1)*

*சித்திரகுத்தனெழுத்தால் தென்புலக்கோன்பொறியொற்றி ★*
*வைத்தஇலச்சினைமாற்றித் தூதுவர்ஓடியொளித்தார் ★*
*முத்துத்திரைக்கடற்சேர்ப்பன் மூதறிவாளர்முதல்வன் ★*
*பத்தர்க்கமுதன்அடியேன் பண்டன்றுபட்டினம்காப்பே. (2)*

*வயிற்றில்தொழுவைப்பிரித்து வன்புலச்சேவையதக்கி ★*
*கயிற்றும்! அக்காணிகழித்துக் காலிடைப்பாசம்கழற்றி ★*
*எயிற்றிடைமண்கொண்டஎந்தை இராப்பகல்ஓதுவித்து ★ என்னைப்*
*பயிற்றிப் பணிசெய்யக்கொண்டான் பண்டன்றுபட்டினம்காப்பே. (3)*

*மங்கியவல்வினைநோய்காள்! உமக்கும்ஓர்வல்வினைகண்டீர் ★*
*இங்குப்புகேன்மின்புகேன்மின் எளிதன்றுகண்டீர்புகேன்மின் ★*
*சிங்கப்பிரானவன்எம்மான் சேரும்திருக்கோயில்கண்டீர் ★*
*பங்கப்படாதுஉய்யப்போமின் பண்டன்றுபட்டினம்காப்பே. (4)*

*மாணிக்குறளுருவாய மாயனைஎன்மனத்துள்ளே ★*
*பேணிக்கொணர்ந்து புகுதவைத்துக்கொண்டேன்பிறிதின்றி ★*
*மாணிக்கப்பண்டாரம்கண்டீர் வலிவன்குறும்பர்களுள்ளீர்! ★*
*பாணிக்கவேண்டாநடமின் பண்டன்றுபட்டினம்காட்பே. (5)*

*உற்றவுறுபிணிநோய்காள்! உமக்கு ஒன்றுசொல்லுகேன்கேண்மின் ★*
*பெற்றங்கள்மேய்க்கும்பிரானார் பேணும்திருக்கோயில்கண்டீர் ★*
*அற்றமுரைக்கின்றேன் இன்னம்ஆழ்வினைகாள்! ★ உமக்குஇங்குஓர்*
*பற்றில்லைகண்டீர்நடமின் பண்டன்றுபட்டினம்காப்பே. (6)*

*கொங்கைச்சிறுவரையென்னும் பொதும்பினில்வீழ்ந்துவழுக்கி ★*
*அங்கோர்முழையினில்புக்கிட்டு அழுந்திக்கிடந்துழல்வேனை ★*
*வங்கக்கடல்வண்ணன்அம்மான் வல்வினையாயினமாற்றி ★*
*பங்கப்படாவண்ணம்செய்தான் பண்டன்றுபட்டினம்காப்பே. (7)*

*ஏதங்களாயினவெல்லாம் இறங்கலிடுவித்து ★ என்னுள்ளே*
*பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து ★*
*போதில்கமலவன்னெஞ்சம் புகுந்துஎன்சென்னித்திடரில் ★*
*பாதவிலச்சினைவைத்தார் பண்டன்றுபட்டினம்காப்பே. (8)*

*★உறகலுறகலுறகல் ஒண்சுடராழியே! சங்கே! ★*
*அறவெறிநாந்தகவாளே! அழகியசார்ங்கமே! தண்டே! ★*
*இறவுபடாமலிருந்த எண்மர்உலோகபாலீர்காள்! ★*
*பறவையரையா! உறகல் பள்ளியறைகுறிக்கொண்மின். (9)*

*★அரவத்தமளியினோடும் அழகியபாற்கடலோடும் ★*
*அரவிந்தப்பாவையும்தானும் அகம்படிவந்துபுகுந்து ★*
*பரவைத்திரைபலமோதப் பள்ளிகொள்கின்றபிரானை ★*
*பரவுகின்றான்விட்டுச்சித்தன் பட்டினம்காவற்பொருட்டே. (10)*

– பெரியாழ்வார் திருமொழி

## 105

உலகத்தில் பாரபட்சமில்லாத ஒரு விஷயம் இருக்கமுடியும் என்றால், அது துன்பங்கள்தான். ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன், மேல்ஜாதி, கீழ்ஜாதி என்ற எந்த வித்யாசமும் இல்லாமல், எல்லோருமே ஒருவிதத்தில் துன்பத்திற்கு ஆளாகின்றனர். ஞானிகளைக்கூட துன்பங்கள் விட்டுவைக்கவில்லை. பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்சர், பகவான் ஸ்ரீ ரமணமஹரிஷிகள், பகவான் யோகிராம்சுரத்குமார் போன்ற மஹான்கள் புற்றுநோயால் அவதிப்பட்டார்கள். பக்தர்கள் சரித்திரத்தைப் படிக்கும்பொழுதும், அவர்களும் எண்ணற்ற துன்பங்களுக்கு ஆளாகி இருப்பதை பார்க்கின்றோம். பக்த மீரா பட்ட துன்பங்களைப் படிக்கும்பொழுது, கல்நெஞ்சமும் கரைந்து விடும். பக்தி செய்யும் அடியார்களுக்கு செல்வத்தையோ, பதவியையோ, புகழையோகூட இறைவன் அருளவேண்டாம். அவர்களுடைய வாழ்க்கையில் துயரங்கள் ஏற்படாமலாவது காப்பாற்றலாம் அல்லவா!

மோட்சத்திற்காக சாதனைகளில் ஈடுபட்டுவரும் சாதகர்களுக்கும், குரு அருகாமையில் வாழ்ந்து அவர்களுக்கு சேவை செய்து வரும் அடியவர்களுக்கும்கூட எண்ணற்ற துன்பங்கள் ஏற்படுகின்றன. மனஅமைதியைத் தேடி வந்தவர்களுக்கு, அதற்கு மாறாக மனதில் குழப்பமும், கவலையும், பயமும், சலனமும் உளைச்சலும், ஏற்படுகின்றன. இவர்களுக்கு இப்படி ஏற்படலாமா? என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது அல்லவா?

அதுபோல், பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்களை குருவாக அடைந்து, அவருக்கு சேவை செய்வதையே தன் வாழ்வின் லட்சியமாக கொண்ட மாதேவகி அவர்களுக்கும், இந்த சந்தேகம் ஏற்பட்டது. தனது மனதில் ஏற்பட்ட சந்தேகத்தை உடனடியாக யோகிராம்சுரத்குமார் அவர்களிடம் வினவினார்கள். ஆச்ரமத்தின் கட்டுமான பணிகள் நடந்து கொண்டிருந்த சமயம் அது. பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்கள் மாதேவகியிடம், ‘‘அங்கு என்ன செய்துகொண்டு

இருக்கிறார்கள்?'' என்று கேட்டார். ஓரிடத்தில் இரும்பை சம்மட்டியால் அடித்துக்கொண்டும், மற்றொருடத்தில் கலவை மிஷின் சப்தம் செய்துகொண்டும், மற்றும் கருங்கல் ஜல்லி கொட்டிக்கொண்டும் இருந்தது. மொத்தத்தில் சொல்ல வேண்டுமானால், ஆட்கள் அங்குமிங்கும் நடந்துகொண்டும், பொருட்கள் அங்குமிங்குமாக இரைந்தும் கிடக்க, அந்த இடமே களேபரமாகவும், சப்தமாகவும் இருந்தது.

''இந்த நிலையில், இந்த இடத்தைக் கண்டு ரசிக்கவும் முடியாது. இப்பொழுது, இங்கு சௌகர்யமாக நடக்கக்கூடமுடியாது அல்லவா? ஆனால், இந்த கட்டுமான பணிகள் முழுவதுமாக முடிந்து, வர்ண பூச்சுக்கள் எல்லாம் முடிந்து, அந்த கட்டிடத்தைப் பார்த்தால், அப்பொழுது அழகாக இருக்குமல்லவா! அவ்வளவு அழகாக கட்டிடம் அமைய வேண்டுமானால் இத்தனை களேபரம் மற்றும் இரைச்சலையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். அதுபோல், பகவத் பணியில் இருக்கும் சாதகர்களிடம் மனதில் உண்டாகும் மனசஞ்சலம், பீதி எல்லாம் அவர்களை மகத்தான பணிக்கு தயார் செய்வதற்கு அல்லது, மனதில் பூர்ணமான சாந்தி ஏற்படுவதற்காகதான்'' என்று யோகியார் கூறினார்கள். நடந்த இந்த விஷயத்தை மாதேவகி அவர்கள் நம் ஸ்வாமிஜியிடம் தெரிவித்தார். இது ரஸமாக இருந்ததால் இந்த விஷயத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ளலாம் என்று எழுதினேன்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---

**ஸ்ரீ ஹரி:**

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில், மஹாரண்யம்**

பக்தர்களின் தரிசனத்திற்காக கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரை
மாலை 3.30 மணி முதல் இரவு 8 மணி வரை

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : அந்தக்காலத்தில், குருகுலத்தில், அதாவது குருவின் அருகாமையிலேயே வாழ்ந்து, பலர் வித்யையைக் கற்று வந்தார்களே! அந்தமாதிரி குருகுலமுறை அவசியம்தானா?*

பதில் : சங்கீதம், நாட்யம், சிற்பம், வாத்யம், புராணபிரவசனம், ஜோதிஷம் போன்றவைகள் எல்லாம் **பா**வ (Bhava) பிரதானமான வித்யைகள். குருநாதருக்கு எப்பொழுது வேண்டுமானாலும் ஹ்ருதயத்திலே **பா**வங்கள் (Bhavam) தோன்றலாம். அப்பொழுது, மாணவன் குருவின் அருகாமையிலேயே இருந்து, அந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்குத் தான் இந்த குருகுல ஏற்பாடு.

*கேள்வி : சிலர், குருநாதர் எதிரில் அமர்ந்திருக்கும்பொழுது, அவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள், அல்லது அவருடைய போட்டோவையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நான் அவர்களிடம், நீங்கள் இப்படி செய்வது தியானமல்ல என்று கூறினேன். அதற்கு அவர்கள், கோபிகைகள் க்ருஷ்ணனை இப்படித்தான் பார்த்துக்கொண்டு இருந்ததாக ஸ்ரீமத் பாகவதத்தில் வருகின்றது. ஆகவே, இது தவறில்லை என்றார்கள். இதற்கு தங்களுடைய அபிப்ராயம் என்ன?*

பதில் : மனதை ஒருமுகப்படுத்துவதுதான் தியானம். ஆனால், அந்த மனமானது ஏதோ ஒரு புள்ளியில், அல்லது ஒரு பொருளில் ஒருமுகம் ஆகாமல் ஈஸ்வரனிடத்தில் அல்லது குருவினிடத்தில் ஒரு முகப்படவேண்டும். குருவின் எதிரில் அமர்ந்துகொண்டோ, அவரது படத்தின் முன்பு அமர்ந்துகொண்டோ, ஒரு பயிற்சிபோல் வெறுமனே உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதால், Self hypnotise ஆகிவிடும். அந்த நிலையில் ஒரு அமைதி, ஒரு Vibration அல்லது சில சக்திகள், காட்சிகள்கூட ஏற்படலாம். இவர்களுக்கு, பிறரையும் தாங்கள் போகின்ற பாதைக்கு மாற்றக்கூடிய ஒரு சக்தியும்கூட இருக்கும்.

ஆனால், இது ஒரு பயிற்சியால் ஏற்பட்ட பலனே. ஒரே கார்யத்தை பலர் செய்யலாம். ஆனால், ஒவ்வொருவர் செய்வதிலும் ஒரு வித்தியாசம் இருக்கின்றது. ஒரு குழந்தையை தாயார் தூக்கும்பொழுது அதில் பாசம் இருக்கின்றது. மருத்துவர் அதே குழந்தையை தூக்கும்பொழுது ஒரு கவனம் இருக்கின்றது. மற்றவர்கள் தூக்கும்பொழுது ஒரு அலட்சியம் இருக்கின்றது. ஆகவே, செயலுடைய விளைவு எந்த ஒரு மனநிலையில் அதைச் செய்கிறோம் என்பதைப் பொறுத்ததே! நாமும், முறைத்து பார்ப்பதால் மட்டுமே கோபிகைகளாக ஆகிவிட முடியாது. கோபிகைகள் கண்ணனை பார்த்துக்கொண்டே இருந்ததால் பக்தர்களாகவில்லை. பக்தி இருந்ததால் பார்த்துக்கொண்டே இருந்தார்கள்.

***கேள்வி : எங்கள் கிராமத்தில் ஹனுமார் ப்ரதிஷ்டை செய்யலாம் என்றிருக்கின்றோம். எந்த ரூபத்தில் ப்ரதிஷ்டை செய்தால் கிராமத்திற்கு நல்லது?***

பதில் : நிற்கின்ற கோலத்தில் இருக்க வேண்டும். ஒரு கையில் கதையை வைத்துக்கொண்டு மற்றொரு கை அபயம் கொடுக்கக் கூடிய மாதிரி இருந்தால் நல்லது. இந்த ரூபத்தில் இருக்கும் வீர ஆஞ்சனேயர் பக்தர்களின் ப்ரார்த்தனைகளையும் பூர்த்தி செய்து வைப்பார். பூத, ப்ரேத, பிசாசுகளின் தொல்லைகளையும் அழிப்பார். இதுவே கிராமத்திற்கு உகந்தது.

---

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English / Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures / essays
5. Articles on religion, philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

# வேத கதைகள் - 86

– தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## உக்த்யம்

ஸோம யாகங்கள் ஏழு பிரிவாக உள்ளன. 1. அக்னிஷ்டோமம், 2. அத்யக்னிஷ்டோமம், 3. உக்த்யம், 4. ஷோடஷீ, 5. வாஜபேயம், 6. அப்தோர்யாமம், 7. அதிராத்ரம். இவைகளில், உக்த்ய யாகத்தைக் குறித்து ஒரு வரலாறு ஐதரேய ப்ராம்ஹணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

தேவர்கள் எப்பொழுது அக்னிஷ்டோமம் என்ற யாகத்தை பின்பற்றினார்களோ அப்பொழுது அரக்கர்களும், உக்த்யம் என்று பெயருள்ள ஸ்தோத்ர ஸஸ்த்ரங்களை பின்பற்றினார்கள். ஆகையால், தேவர்களும் அரக்கர்களும் யாகத்தில் சமமான பலம் உள்ளவர்கள் ஆகவே இருந்தனர். தேவர்கள், ஒருவித உயர்வையும் அடையவில்லை. அப்பொழுது, ரிஷிகளுக்குள் நுட்பமறிந்த பரத்வாஜர், உக்த்யத்தில் ஈடுபட்ட அந்த அரக்கர்களை தனிமையில் கண்டு, பின்வருமாறு கூறினார்.

''தனிமையில் உள்ள இந்த அரக்கர்கள் உக்த்யம் என்ற ஸ்தோத்ர ஸஸ்த்ரங்களில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களை தேவர்கள், ரிஷிகள் யாரும் காணவில்லை'' என்றார். பரத்வாஜர் இவ்விதம் கூறி அரக்கர்களை ஒழிப்பதற்காக ஒரு மந்த்ரத்தை உரக்க கூறி அக்னியை அழைத்தார். பரத்வாஜரால் அழைக்கப்பட்ட அக்னி, பரத்வாஜர் அருகில் வந்தார். வரும்பொழுது, இவ்விதம் எண்ணினார். 'இளைத்தும், நீண்டும், தலை வெளுத்தும் உள்ள இந்த பரத்வாஜர் என்ன செய்யப் போகிறார்? இவரால் என்ன செய்ய முடியும்?'' என்று எண்ணினார்.

உடன் பரத்வாஜர் அக்னியைப் பார்த்து, ''இந்த அரக்கர்கள் உக்த்ய யாகத்தில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களை யாரும் காணவில்லை'' என்று கூறினார். இவ்விதம் பரத்வாஜரின் பதிலைக் கேட்டு, தான் குதிரை உருவமெடுத்து அந்த அரக்கர்களை நோக்கிச் சென்றார். அரக்கர்கள் மேல் குதிரையை வேகமாக செலுத்தி அரக்கர் களைக் கொன்றார். குதிரை உருவமெடுத்து அரக்கர்களைக் கொன்ற

தால் ஒரு ரிக்கில் உண்டான ஸாமத்திற்கு ஸாகமச்வம் என்று பெயர் ஏற்பட்டது. இவ்விதம் ஸாகமச்வ ஸாமாவினால் விரட்டப்பட்ட அரக்கர்கள் மைத்ராவருண ஸஸ்த்ரத்தை அண்டினர். அப்பொழுது, இந்திரன் தேவர்களைப் பார்த்து அரக்கர்களை விரட்டுவதில் எனக்கு உதவி தேவை. ஆதலால், உங்களுக்குள் யார் மைத்ராவருண ஸஸ்த்ரத்தில் அண்டிய அரக்கர்களை விரட்டப்போகிறார்கள்'' என்றான். அப்போது தேவர்களுக்குள் வருணன், 'ஏ இந்திரனே! நீயும் நானும் சேர்ந்து அரக்கர்களை விரட்டுவோம்' என்று சொல்ல, இந்திரனும் அங்ஙனமே தீர்மானித்து மைத்ராவருண ஸஸ்த்ரத்திலிருந்து அரக்கர்களை விரட்டினார்கள். பிறகு ப்ராம்ஹணாச்சம்ஸி என்ற ரித் விக்கின் மந்திரத்தை அண்டிய அரக்கர்களை இந்திரன், ப்ருஹஸ்பதி இருவரும் சேர்ந்து விரட்டினர். பிறகு அச்சாவாக ஸஸ்த்ரத்தில் ஒளிந்த அரக்கர்களை இந்திரன், விஷ்ணு இருவரும் விரட்டினர். இவ்விதம், அக்னிஷ்டோம யாகத்தைக் காட்டிலும் உக்த்யம் என்ற இந்த யாகமானது மிகவும் உயர்ந்தது. இதை நன்கு செய்து தேவர்கள் வெற்றி பெற்றனர். இந்த வரலாற்றை படிப்பவர்களுக்கும் நிச்சயம் வெற்றி ஏற்படும்.

---

ஒரு சமயம், பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளை தர்சனம் செய்வதற்காக, வெளிநாட்டு பத்திரிக்கையாளர்கள் வந்திருந்தனர். அவர்கள், ஜனத்தொகையை குறைப்பதற்காக குடும்ப கட்டுப்பாடு அதாவது BIRTH CONTROL திட்டத்தை அதி தீவிரமாக பிரச்சாரம் செய்பவர்கள். இது விஷயமாக பகவான் ஸ்ரீ ரமணருடைய அபிப்ராயம் என்ன? என்பதை அவர்கள் விடாமல் கேட்டனர். முதலில், இது விஷயமாக மௌனம் சாதித்த பகவான், அவர்கள் மீண்டும் மீண்டும் வற்புறுத்தவே பின்வருமாறு உரைத்தார்.

''நீங்களும், நானும் ஏற்கனவே பிறந்துவிட்டோம். ஆகவே, இதைப்பற்றி பிரச்சாரம் செய்வதால் நமக்கு ஒரு பலனும் இல்லை. ஆனால், பிறந்த நாம் ஒரு நாள் கண்டிப்பாக இறக்கத்தான் போகின்றோம். அதை எப்படி தடுத்து நிறுத்துவது என்று சிந்தித்தால் உபயோகமாக இருக்கும் அல்லவா!'' என்றார். மஹான்களின் எல்லா பேச்சுக்களிலும் வேதாந்த தத்துவமே வெளிப்படுகின்றது பார்த்தீர்களா?

## எந்தரோ மஹானுபாவுலு - 76

மஹாத்மாக்களின் ஹ்ருதயம் வஜ்ரத்தைவிட கடினமாகவும் புஷ்பத்தைவிட கோமளமாகவும் இருக்கும் என்பதை புரிந்து கொள்வதே சாதாரண மனிதர்களுக்கு சிரமமாக இருக்கும். உருவமில்லாத கடவுள், பக்தர்களுக்காக விதவிதமாக ரூபம் எடுத்துக்கொள்வதுபோல், காரியமே இல்லாத பரப்ரஹ்மம், ச்ருஷ்டி, ஸ்திதி, லயம் என்ற காரியங்களை செய்வதுபோல், ஜன்மமே இல்லாத இறைவன் ராம, க்ருஷ்ணாதி அவதாரங்கள் எடுத்து வருவது என்பதெல்லாம், எப்படி நமது அறிவால் புரிந்துகொள்ள முடியாதோ, அதுபோல்தான், மஹாத்மாக்களின் ஹ்ருதயத்தை புரிந்துகொள்வது என்பது.

மிகவும் சுகுமார ஹ்ருதயம் கொண்ட ராமர், ராக்ஷஸர்களை கொன்று குவிக்கவில்லையா? சீதையைக் காணாமல் கோபத்தாலும் துக்கத்தாலும் தவித்த ராமர், ராவண வதத்திற்குப் பிறகு சீதையைப் பார்த்து, கூரிய பாணங்கள் போன்று பேசிய வசனங்களை யார்தான் பொறுத்துக்கொள்ள முடியும்? ப்ராணனைவிட பெரியதாக நேசிக்கும் பொருளை சந்தர்ப்பம் நேரும்பொழுது தியாகம் செய்வதற்கும் மஹாத்மாக்கள் சஹஜமாக துணிவார்கள். அவர்களால் எதையும் அன்புடனும், உறுதியுடனும் ஏற்றுக்கொள்ளவும் முடியும்; துறக்கவும் முடியும். இது சாதாரண மனதுக்கு புரியாத ஒன்று.

மஹாப்ரபு, பக்தர்களிடம் காண்பித்த அன்பு அசாதாரணமானது. அவரால், பக்தர்களைத் துறக்கமுடியும் என்று யாராலும் கனவுகூட காண முடியவில்லை. சசீமாதா, விஷ்ணுப்ரியா மற்றும் பக்தர்கள் அனைவரும், தன்னைத்தான் ப்ரபு மிகவும் நேசிக்கிறார்; தங்களது பாச வலையில் அவர் கட்டுண்டுள்ளார் என்றுதான் நினைத்தனர். தன்னைவிட்டு அவர் பிரிந்து ஒரு நாள் கூட இருக்கமாட்டார் என நினைத்தனர். ஆனால், ப்ரபுவோ மஹாபுருஷர், இதெல்லாம் அவருக்கு ஒரு லீலைதான். அவருக்கு யார் பிரியமானவர்? யார் அப்ரியமானவர்? உலகம் முழுவதையும் நேசிக்கத்தெரிந்தவர் ப்ரபு. ப்ரேமையின் ஸ்வரூபம் அவர்.

மஹாப்ரபு சன்யாஸம் ஏற்றுக்கொள்ளப் போகிறார் என்ற செய்தி, நவத்வீபத்தில் விரைவாகப் பரவி, அனேகர் அவரை தர்சனம் செய்ய வந்தனர். ப்ரபு பக்தர்களுடன் சங்கீர்த்தனத்தில் கலந்துகொள்ளவில்லை. பக்தர்களே கூடி நாமகீர்த்தனம் செய்துவிட்டு ப்ரபுவை தர்சிக்க அவரது வீட்டைத்தேடி வருவார்கள்.

ப்ரபு, உத்தராயணத்தில் சன்யாஸம் மேற்கொள்ள விரும்பி தகுந்த திதியையும் நிச்சயித்துக்கொண்டார். நித்யானந்தரிடம் இதைப்பற்றிக் கூறிவிட்டு சசீமாதா, சந்திரசேகராச்சாரியர், கதாதரர், முகுந்ததத், ப்ரும்மானந்தர் ஆகிய ஐந்து பேரைத்தவிர யாரிடமும் இதுபற்றித் தெரிவிக்கவேண்டாம் என்றும் ஆணையிட்டுவிட்டார். நித்யானந்தர், ப்ரபுவின் கட்டளையை மீறாமல் துக்கத்துடன் அந்த நாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

சன்யாஸம் ஏற்றுக்கொள்ள நிச்சயித்த நாளும் வந்தது. காலையில் நித்ய கர்மாக்கள் முடிந்ததும், ப்ரபு பக்தர்களுடன் ஸ்ரீவாஸ்பண்டிதர் வீட்டிற்குச் சென்றார். அங்கு கூடியிருந்த பக்தர்களுடன் நாமசங்கீர்த்தனம் நடந்தது. பிறகு, அனைவரும் கங்காதீரம் சென்றனர். அங்கு க்ருஷ்ண கதாம்ருதத்தை வர்ஷித்தார். பிறகு, அனைவருடனும் தனது க்ருஹத்தை அடைந்தார். அனைவரது மனதிலும் அன்று அபூர்வமான உணர்வு ஏற்பட்டது. ப்ரபுவின் அந்தரங்க பக்தர்கள் அன்று இரவு ஒன்று கூடினர். வாழைப்பூ விற்கக்கூடிய ஸ்ரீதர் அன்று அவல்பொரியை எடுத்துக்கொண்டு ப்ரபுவை தர்சிக்க வந்தார். தனது ஏழை பக்தனின் கடைசி அன்பு காணிக்கையைப் பெற்றுக்கொண்டு ப்ரபு ப்ரசன்னமானார். ''ஸ்ரீதரா! இப்படி அழகான பொரியை எங்கிருந்து கொணர்ந்தாய்?'' என்று அன்புடன் கூறிவிட்டு அதை அன்னையிடம் தந்தார். அப்போது ஒரு பக்தர் நிறைய பால் கொண்டுவந்து கொடுக்க, ப்ரபு 'கல கல' வென்று சிரித்து, ''ஸ்ரீதரா! நீ அவல்பொரி கொண்டுவந்த வேளை பால் வந்துவிட்டது பார்'' என்றார். அன்னையிடம் அவலினால் பால் பாயஸம் செய்யச்சொன்னார். அன்று ப்ரபு, அனைத்து பக்தர்களுடனும் பால் பாயஸத்துடன் உணவருந்தினார். ப்ரபு, நவத்வீபத்தில், சசீமாதாவின் கைகளால் பரிமாறப்பட்ட கடைசி போஜனம் செய்தது அன்றுதான். பிறகு, அனைவரும் அவர் அவர் வீட்டிற்குச் சென்றனர். ப்ரபுவும் தனது சயனக்ரஹத்தை அடைந்து படுத்துக்கொண்டார்.

எப்பொழுது ப்ரபுவிடமிருந்து பிரிவு ஏற்படுமோ என்ற பயத்தினால் நடுங்கிக்கொண்டிருக்கும் விஷ்ணுப்ரியா, கண்ணீர் பெருகிக்கொண்டே அறையினுள் நுழைந்தார். ப்ரபு சிரித்துக்கொண்டே, ''ப்ரியே! சிரித்துக்கொண்டு இருக்கும் உன் முகத்தை ஒரு முறை காண விரும்புகிறேன். ஒருமுறை சந்தோஷமாக என்னைப் பாரேன்'' என்றார்.

விஷ்ணுப்ரியா மௌனமாக இருக்கவே, ப்ரபுவே சிறிது கட்டளையிடும் குரலில், ''விஷ்ணுப்ரியா! நீ ஏன் பேசமாட்டேன் என்கிறாய்? என்ன யோசிக்கிறாய்?'' என்று வினவினார். கண்ணீரைத் துடைத்துக்கொண்டே விஷ்ணுப்ரியா கூறலானாள், ''ப்ரபோ! இன்று ஏனோ தெரியவில்லை, என் மனம் பதறுகிறது. மனம் வெடித்துவிடும் போலிருக்கிறது. என்ன விஷயம் என்று எனக்கே புரியவில்லை'' என்றாள்.

ப்ரபு, விஷயத்தை மாற்றும் வகையில், ''நீ எப்பொழுதும் எதையோ யோசித்துக்கொண்டே இருக்கிறாய். அதன் விளைவுதான் இப்படியாகிறது. நீ சிரித்துவிடு. உன் சோக மோகமெல்லாம் போய்விடுவதைப் பார்ப்பாய்'' என்றார்.

விஷ்ணுப்ரியா சிறிது ரோஷத்துடன், ''உங்களுக்கு என்னை சீண்டுவதேதான் வேலை. இந்த மாதிரி சமயத்தில் உங்களுக்கு வேண்டுமானால் சிரிக்க முடியும். நான் எப்படிச் சிரிப்பேன்? மனம் ஆனந்தமடைந்தால்தான் சிரிப்பு வரும்'' என்றாள்.

விஷ்ணுப்ரியாவிற்கு அன்று தனது கணவர் தன்னை அனாதையாக்கிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறப்போகிறார் என்று உள்ளுணர்வு கூறிவிட்டது. ஆனால், அதை அவரிடம் கூறவில்லை. இரவு முழுவதும் உறங்காமல் ப்ரபுவின் பாதங்களை பிடித்துவிட்டுக் கொண்டிருந்தாள். ப்ரபுவும் அன்று வழக்கத்திற்கு மாறாக விஷ்ணு ப்ரியாவை அனேகம்முறை ப்ரேமையுடன் ஆலிங்கனம் செய்து கொண்டு அவளுக்கு ப்ரேம சுகத்தை அளித்தார். ஆனால், அன்று விஷ்ணுப்ரியாவிற்கு இந்த ப்ரேம ஆலிங்கனத்தால் விசேஷமான சுகம் ஏற்படவில்லை. மரணதண்டனை விதித்து கழுவில் ஏற்றப்பட்டவன் முன்பு ருசியான உணவுப்பண்டங்களை வைத்தால்

அவனுக்கு ருசி உண்டாகுமா என்ன? அது போன்று அன்று பதியின் ப்ரேமை விஷ்ணுப்ரியாவிற்கு வேதனையையே அளித்தது.

அன்னைக்கு அன்று ப்ரபு வீட்டைவிட்டுச் செல்லப்போகிறார் என்று முன்னமே தெரியுமாதலால் அவள் வாசற்படியிலேயே படுத்துக்கொண்டு பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். விஷ்ணு ப்ரியா இரவு முழுவதும் பதியின் சரணங்களை விடவேயில்லை.

சுக்ல பக்ஷத்து சந்திரன் மறையும் நேரம். இரவு 2 மணி ஆகி இருந்தது. நகரம் முழுவதும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. ப்ரபுவிற்கு ஏது உறக்கம்? கால்களைப் பிடித்துக்கொண்டிருந்த விஷ்ணுப்ரியா எப்போது உறங்குவாள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். விதி வலியது. எது நடக்க வேண்டுமோ அதற்கு ஏற்றார்போல் சூழ்நிலை அமையும். இரவு முழுவதும் விழித்துக்கொண்டிருந்த விஷ்ணுப்ரியா சற்றே கண்ணயர்ந்தாள். ப்ரபுவின் சரணங்களைப் பிடித்தபடியே கட்டிலில் சாய்ந்தாள். ஆழ்ந்து உறங்கிவிட்டாள்.

ப்ரபு இந்த தருணத்தைத்தானே எதிர்பார்த்தார்! மெதுவாக தன்னுடைய ஒரு சரணத்தை விஷ்ணுப்ரியாவின் அணைப்பிலிருந்து விடுவித்துக்கொண்டார். ப்ரியா சிறிது புரண்டாள். ப்ரபு தனது ஒரு சரணத்தை அவள் பிடியில் இருத்திக்கொண்டார். மறுபடி விஷ்ணுப்ரியா உறங்கவும் மெதுவாக மற்றொரு சரணத்தையும் விடுவித்துக் கொண்டு மெதுவாக கட்டிலிலிருந்து இறங்கினார். எதிரில் ஒரு விளக்கு முணுக்கென்று எரிந்துகொண்டிருந்தது. விளக்கின் ஒளியில் சந்திரனைப் போல் ப்ரகாசிக்கும் விஷ்ணுப்ரியாவின் முகத்தைப் பார்த்து ஒரு க்ஷணம் ப்ரபு தயங்கி நின்றார்.

''இந்த கபடமறியாத இளம் பெண்ணிற்கு நான் இப்படி ஒரு அனர்த்தத்தை செய்கிறேனே! அவள் நினைவில்லாமல் இருக்கும் பொழுது இப்படி நிரந்தரமாக அவளை விட்டு பிரிந்து செல்கிறேனே! எனது செயல் எத்தனை கடினமானது, எத்தனை நிந்திக்கக்கூடியது!'' என்று நினைத்தார். பிறகு தன்னை சுதாரித்துக்கொண்டார்.

''ஜீவகோடிகளின் நலனுக்காக நான் இந்தக் கடுமையான காரியத்தை செய்யத்தான் வேண்டும். நான் கடினமாக இருந்தால்தானே உலக நலனுக்காக பாடுபட முடியும்! மாயையில் உழலும் ஜீவன்களுக்கு த்யாகம், வைராக்யம் இவை பற்றி பேச முடியும்! மற்றவர்களுக்கு

பாடம் புகட்டும் விதத்தில் நான் நடந்துகொள்ள வேண்டாமா!'' என்று நினைத்து மனதுக்குள் விஷ்ணுப்ரியாவிற்கு ஆசீர்வாதம் செய்துவிட்டு அறையை விட்டு வெளியே வந்தார். அழுது அழுது நினைவின்றி படுத்துக்கொண்டிருக்கும் அன்னையைப் பார்த்து, ''அன்னையே! மிகவும் கஷ்டப்பட்டு என்னை போஷித்து வளர்த்து ஆளாக்கினாய்! என்றாலும் நான் உனக்கு ஒரு சேவையும் செய்யவில்லை! உனக்கு நான் ஜன்ம ஜன்மங்களுக்கு கடனாளியாகத்தான் இருப்பேன். இதிலிருந்து எனக்கு விடுதலையே கிடையாது!'' என்று கூறிவிட்டு வீட்டைவிட்டு அவசரமாக வெளியே வந்து கங்கைக்கரையை நோக்கி ஓடினார்.

ப்ரபுவின் சகோதரன் விச்வரூபன் எப்போது வீட்டை விட்டாரோ அதே காலம், அதே சமயம், ப்ரபுவும் வீட்டைத் துறந்து வந்தார். கங்கையைத் தாண்ட அந்த இரவில் ஏது படகு! விச்வரூபனைப் போலவே, ப்ரபுவும் நீந்தியே கங்கையின் மறுகரையை அடைய நிச்சயித்தார். கரையில் நின்றுகொண்டு நவத்வீபத்தை கை குவித்துக் கொண்டு பார்த்துவிட்டு, ''நக்ஷத்திரங்களுடன் கூடிய ராத்திரியே! நீ நான் வீட்டைத் துறந்ததற்கு சாக்ஷி! பத்து திசைகளே! நீங்கள் நான் வீட்டை விட்டு வெளியேறுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்! ஹே தர்மமே! நீ எனது அனைத்து செயல்களையும் புரிந்துகொள்பவன்! மக்களின் நலனுக்காக நான் வெளியேறுகிறேன்! விச்வப்ரஹ்மாண்டத்தைக் காக்கும் தெய்வமே! நீ அனைத்து ஜீவன்களையும் காத்து வருகிறாய்! காக்கப் போகிறாய்! நான் கவலையின்றி செல்கிறேன்'' என்று கூறிவிட்டு நவத்வீபத்து தேவதைகளை வணங்கி, பாகீரதியை வணங்கி கங்கையின் குளிர்ந்த நீரில் மிதந்து நீந்தி அக்கரையை அடைந்தார். ஈர உடையுடன் கட்வா கிராமத்தில் உள்ள கேசவபாரதியின் ஆச்ரமத்தை அடைந்தார்.

எந்த படித்துறை நவத்வீபத்து மக்களிடமிருந்து விச்வம்பரன், மஹாப்ரபு ஆகிய இரு சகோதரர்களையும் நிர்தயமாக பிரித்ததோ, அந்த படித்துறை இன்றும் ''நிர்தயகாட்'' என்று பெயர் பெற்று தனது கடினமான மனதை உலகத்திற்கு விளக்குகிறது.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 80

ஒரு சமயம், கடவுள், மரண தேவதையை அழைத்து, ''நீ நேராக டில்லிக்குச் செல்! அங்கு, ஒரு நடுத்தர வயது பெண்மணியின் ஆயுட்காலம் முடியப்போகிறது. அந்த ஜீவனை அழைத்து வந்து விடு'' என்று ஆணையிட்டார். கடவுளின் ஆணையை நிறைவேற்றும் பொருட்டு, மரணதேவதையும் கடவுளால் குறிப்பிடப்பட்ட அந்த இடத்தை அடைந்தது. அப்பொழுது, அங்கு அது கண்ட காட்சி அதை வாயடைத்து நிற்கச் செய்தது.

'அது ஒரு பாழடைந்த சிறிய வீடு. அங்கு ஒரு ஏழைப்பெண் சுயநினைவின்றி ரத்த வெள்ளத்தில் கிடந்தாள். ஒரு மணிநேரத்திற்கு முன்பாகத்தான் மூன்று பெண் குழந்தைகளை பிரசவித்திருந்தாள். ஒரு குழந்தை, தாய்ப்பால் குடித்துக்கொண்டிருந்தது. மற்ற இரு குழந்தைகளும் தாயாரின் இரு பக்கமும் இருந்தன'.

இந்தக் காட்சி மரணதேவதையின் மனதை உருக்கிவிட்டது. அதன் கண்களில் நீர் ததும்பியது. கடவுளை நினைத்து கோபம் வந்தது. ''நமது கடவுள் மிகவும் கொடுமையாளர். இங்கு நிலவும் சூழ்நிலை என்னவென்று நன்கு அறிந்துகொள்ளாமல் ஆணைகள் பிறப்பித்து விடுகின்றார். நான் இப்பொழுது இந்தப் பெண்ணின் உயிரை எடுத்துச் சென்றால், இந்தப் பச்சிளம் குழந்தைகளின் கதி என்னவாகும்? இன்னொரு பத்து வருடங்கள் தாயார் உயிருடன் இருந்தால் இந்தக் குழந்தைகள் ஏதோ தெருக்களில் பிச்சை எடுத்தாவது பிழைக்கக் கற்றுக்கொண்டுவிடும். இதைப்பற்றியெல்லாம் சிறிதும் யோசிக்காமல், கடவுள் இப்படி ஆணையிட்டுவிட்டாரே? இந்த நிலைமையில் என்னால் நிச்சயமாக இந்தப் பெண்ணின் உயிரை எடுக்க முடியாது. ஆணையை மீறியதற்காக கடவுள் எவ்வளவு கோபித்துக்கொண்டாலும் பரவாயில்லை. நான் இந்தக் காரியத்தைச் செய்யப்போவதில்லை'' என்று மரணதேவதை முடிவெடுத்து, வெறும் கையுடன் கடவுளிடம் சென்றது.

கடவுளின் பாதங்களைப் பற்றிக்கொண்டு, ''நீங்கள் எப்படியாவது அந்த ஏழைப்பெண்ணிற்கு இன்னமும் பத்து வருடங்கள் உயிர்ப்பிச்சை

இடவேண்டும்'' என்று மன்றாடியது. கடவுள், மரணதேவதையைப் பார்த்து, புன்னகைத்தவாறே, ''நான்தான் உன்னை மரண தேவதையாக நியமித்துள்ளேன். உனது பணி என்னவென்றால் மனிதருடைய ஆயுட்காலம் முடியும்பொழுது, அவர்களது உயிரை அழைத்து வர வேண்டும். அவ்வளவுதான். அதற்குத் தேவையான திறனையும், பயிற்சியையும் நானே உனக்கு அளித்துள்ளேன். நீ சொல்வதிலிருந்து எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், கடவுளாகிய என்னைக் காட்டிலும் நீ புத்திசாலியாகவும், கருணை மிகுந்தவனாகவும், இருப்பதாக நீ எண்ணுகிறாய். நான் படைத்த இந்த உலகத்தை எப்படி நிர்வாகம் செய்ய வேண்டும் என்று எனக்கே உபதேசம் செய்யும் அளவிற்கு தைரியம் வந்துவிட்டதா உனக்கு? எனது ஆணையை மீறியதற்கான தண்டனையை நீ அனுபவித்துத்தான் ஆக வேண்டும். இந்தக் கணத்திலிருந்து தேவதைகளுக்கே உரித்தான எல்லா விசேஷ சக்திகளும், சலுகைகளும் உன்னிடமிருந்து விலகிவிடும். நீ மீண்டும் டில்லிக்குச் சென்று, அங்கு ஒரு சராசரி மனிதன் போல் வாழ்ந்து வருவாய். உனது முட்டாள்தனத்தை எண்ணி நீயே இருமுறை சிரிக்கும் வரை, அதுதான் உனக்கு கதி'' என்று கூறிவிட்டார்.

மறுகணமே, மரணதேவதை, மனித உடல் பூண்டு, உடுத்த உடைகூட இல்லாமல், டில்லி கன்னாட் சர்க்கஸில் ஒரு பரபரப்பான சாலையில் நின்றுகொண்டிருந்தது. அப்பொழுது ஜனவரிமாதம். மாலைப்பொழுதாகிவிட்டதால் குளிர் மிகவும் அதிகமாக இருந்தது. மரணதேவதையின் உடல் எல்லாம் ஒரே நடுக்கம். அப்பொழுது அந்த வழியாக வந்த ஒரு செருப்பு தைப்பவன் மரணதேவதையின் பரிதாபநிலையைப் பார்த்து மிகவும் வருந்தி, அதை ஒரு துணிக் கடைக்கு அழைத்துச்சென்று குளிருக்குத் தேவையான உடைகளை வாங்கிக் கொடுத்தான். மரணதேவதை அவனிடம், ''எனக்கு தங்குவதற்கு எந்த இடமும் இல்லை. எனக்கு உதவ உறவினர்களோ, நண்பர்களோ கிடையாது. நீங்கள்தான் எனக்கு ஏதாவது ஒரு வழி சொல்லவேண்டும்'' என்று கெஞ்சியது. ''கவலைப்படாதே! இப்பொழுது நீ எனது நண்பனாகிவிட்டாய். நீ தாராளமாக என்னுடன் எனது வீட்டிலேயே தங்கலாம். ஆனால், அதற்குமுன் உனக்கு ஒரு எச்சரிக்கை. எனது மனைவி ஒரு முன்கோபக்காரி. கோபம் வந்துவிட்டால்

அவள் என்ன செய்வாள் என்று தெரியாது. வீட்டிலுள்ள பாத்திரங்களை எல்லாம் தூக்கி எறிவாள். அது பரவாயில்லை என்றால் நீ என்னுடன் வரலாம்'' என்றான். மரணதேவதை உடனே வருவதாக தலையசைத்தது.

இருவரும் வீட்டை அடைந்தனர். குழந்தைகளுக்கு துணிவாங்க எடுத்துச்சென்ற பணத்தில், மரண தேவதைக்கு உடைகளை வாங்கி இருப்பதை அறிந்தவுடன் செருப்பு தைப்பவனின் மனைவிக்கு வந்ததே கோபம்! கையில் கிடைத்த மண்பாண்டங்களையெல்லாம் எடுத்து இருவர் மீதும் வீசியெறிந்தாள். மரணதேவதைக்கு நன்றாக அடிபட்டது. நண்பரின் எச்சரிக்கைக்கு செவி சாய்க்காமல் வந்து அடிவாங்கிய தனது முட்டாள்தனத்தை எண்ணி மரண தேவதை முதன்முறையாக தனக்குள் சிரித்துக்கொண்டது.

அன்று முதல், மரணதேவதை தனது நண்பனுடன் கடைக்குச் சென்று, செருப்பு தைக்க உதவி செய்தது. தேவ உலகங்களில் தேவர்கள் அணியும் அழகான காலணிகளை மனதில் வைத்துக்கொண்டு, மரணதேவதை புதிய புதிய அழகான காலணிகளை தயார் செய்தது. வெகுவிரைவில் அந்தக் கடை மிகவும் பிரசித்தமானது. பல இடங்களில் இருந்து மக்கள் அந்தக் கடையைத் தேடி வந்தனர். இப்படியே 12 வருடங்கள் உருண்டோடிவிட்டன.

ஒருநாள், மரணதேவதை ஒரு துணிக்கடையின் முன் நின்று கொண்டிருந்தது. அப்பொழுது, அங்கு ஒரு பெரிய இம்பாலா கார் வந்தது. அந்த காரிலிருந்து ஒரு வயதான பணக்கார பெண்மணி இறங்கினார். அவரைத் தொடர்ந்து மூன்று அழகிய, சமவயதுடைய இளம்பெண்கள் இறங்கினார்கள். அந்த மூன்று பெண்களின் இடது கன்னங்களிலும் திரிசூலம் போன்ற சிறிய மச்சம் காணப்பட்டது. அதைப் பார்த்தவுடன் மரணதேவதைக்கு தூக்கிவாரிப் போட்டது. அதன் மனத்திரையில் ஒரு காட்சி! 12 வருடங்களுக்கு முன் கடவுள் தன்னை ஒரு ஏழைப்பெண்ணின் உயிரை எடுத்துவரச் சொன்ன போது, தான் பார்த்த மூன்று பெண் குழந்தைகளின் இடது கன்னங்களிலும் அதே அடையாளம் இருந்தது.

சுதாரித்துக்கொண்டு, மரணதேவதை அந்த பணக்கார பெண்மணியின் அருகில் சென்று, ''இந்த அழகிய சிறுமிகள் உங்களது

பெண்களா?'' என்று கேட்டது. சிரித்துக்கொண்டே அந்த பெண்மணி, ''இல்லை! 12 வருடங்களுக்குமுன், சரியாகச் சொல்லவேண்டும் என்றால், மே மாதம் 6-ந் தேதியன்று, நான் எனது காரில் கன்னாட் சர்க்கஸ் வழியாக சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது, ஒரு பாழடைந்த வீட்டிலிருந்து குழந்தைகளின் அழுகுரல் கேட்டது. காரை நிறுத்திவிட்டு அருகில் சென்று பார்த்தால், மூன்று பெண் குழந்தைகளைக் கண்டேன். அருகில் இறந்துவிட்ட தாயாரின் உடல். நான் ஒரு பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவள். எனது கணவரோ இறந்துவிட்டார். எனக்கு குழந்தைகள் கிடையாது. இந்த மூன்று குழந்தைகளையும் என்னுடன் அழைத்து வந்துவிட்டேன். சட்ட ரீதியாக இவர்களை எனது வாரிசுகளாக தத்தெடுத்துக்கொண்டேன். இவர்களை நன்கு படிக்க வைத்துள்ளேன். எனது சொத்துக்களுக்கு எல்லாம் இந்த மூவருமே வாரிசுகள்'' என்றார்.

மரணதேவதை அப்படியே ஸ்தம்பித்து நின்றது. முற்றிலும் அறிந்தவரான கடவுளின் ஆணையை தனது சிற்றறிவால் ஆராய்ந்து, தவறு என்று நினைத்ததை எண்ணி வெட்கித் தலைகுனிந்தது. அந்த ஏழைப்பெண் அப்பொழுது இறக்கவில்லை என்றால் இந்த சிறுமிகளுக்கு இப்படியொரு சுக ஜீவனம் கிடைத்திருக்காது என்பதை மரண தேவதை உணர்ந்தது. இரண்டாவது முறையாக, தனது மூடத்தனத்தை எண்ணி தனக்குள் சிரித்துக்கொண்டது.

கடவுள் நமக்குக் கொடுத்துள்ள இம்மியளவு அறிவினால் ஏற்படும் கர்வத்தினால் எங்கும் நிறைந்தவரும், எல்லாம் உணர்ந்தவருமான அவரது செய்கைகளையே நாம் கேள்விகேட்கத் துணிந்துவிடுகின்றோம். கடவுளின் சங்கல்பத்தின்படி நடைபெறும் அனைத்துமே நன்மைக்காகத்தான் என்பதை எல்லாம் வல்ல கடவுள்தான் நமக்கு உணர்த்தியருளவேண்டும்.

**– ஸ்ரீ சாந்தானந்தபுரி மஹாராஜ் அவர்களின்**
**''Stories for Meditation'' நூலில் இருந்து தமிழாக்கம்**

---

God is infinite & there are infinite ways to reach him.

**— Bhagavan Yogi Ramsuratkumar**

# மாலே மணிவண்ணா - 23

– மஹாவித்துவான், மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

எம்பெருமானது பெருந்திருவுருவைச் சொல்லத்தொடங்குகிற போது முதலில் அவரது திருக்கரங்களைச் சொல்கிறார். ஆண்டவன் திருவுருவிற்கும் நமக்கும் இருக்கும் பெரிய வேறுபாடு கைகள்தான். நமக்கு இரண்டு கைகள் என்றால் இறைவனுக்கு நான்கு கைகள். ஏன் இவ்வாறு?

‘கை’ என்பது செயலுக்கு அடையாளம். கையறுநிலை என்பது செயலற்ற நிலை என்று ஆகும். உலகில், சோம்பேறியாக, ஒன்றும் செய்யமாட்டாமல் இருக்கிறவனைப் பார்த்துக் ‘கையால் ஆகாதவன்’ என்று சொல்வதைப் பார்க்கிறோம். தேர்வுக்குக் கண்விழித்துப் படிக்க வேண்டும். அவ்வாறு படிக்காத ஒரு பையன், தேர்வில் தோல்வியடைகிறான். அவனை அவன் தகப்பனார், ‘அவனா! கையால் ஆகாதவன்’ என்று சொல்வார். அவன் கண்விழித்துப் படிக்காமையால் ‘கண்ணால் ஆகாதவன்’ என்றுதானே சொல்லப்பெற வேண்டும்.

காலைபொழுதில் எழுந்து இரண்டு மைல் நடந்துசென்று பக்கத்து ஊரில் ஒருவரிடம் பத்து ரூபாய் வாங்கி வரும்படிச் சொன்னார் தன் மகனை. அவன் அதைச் செய்யாமல் இருந்துவிட்டான். அவர் சொல்கிறார் தன் மகனைப் பற்றி, ‘அவனா! கையால் ஆகாதவன்’ என்று. இவனைக் ‘காலால் ஆகாதவன்’ என்றுதானே சொல்லவேண்டும். கை என்பது செயலுக்கு அடையாளம். கையால் கொடுக்கிறோம், வாங்குகிறோம், அடிக்கிறோம், அணைக்கிறோம் என்று செயல்களைச் செய்யப் பேருதவியாகும் கைகளின் பெயராலேயே நடத்தல், பார்த்தல், பேசுதல், கேட்டல் முதலாகிய தொழில்களையும் சார்த்தி அவை நிகழ்த்தாதபோது, ‘கையால் ஆகாதவன்’ என்றே சொல்லுதல் உலக வழக்கு.

செயலுக்கு அடையாளமாகக் கை இருத்தலினால் செயல் அற்ற நிலையைக் ‘கையறு நிலை’ என்று சொன்னார்கள். செயல் அற்ற

கையறு நிலையானால் செயல் உற்ற நிலை கை உறு நிலைதானே. செயலில் சிறந்து நிற்கும் கடவுளுக்கு நம்மைவிட அதிகமான கைகளைக் கொடுத்து எல்லாம் செய்ய வல்லவர், அளப்பரும் செயலாற்றல் உடையவர் என்பதை உணர வைக்கிறோம். படைத்துக் காத்து அழித்து அருளும் பல செயல்களையும் இடையறாது இழைக்கும் எம்பெருமானைக் கைகளாலேயே மிகுதிப்படுத்திக் காண்பித்து அளப்பரும் ஆற்றலைப் புரியவைக்கிறார் பரிபாடல் ஆசிரியர். அந்த முறையில் எம்பெருமானது கைகளைப் பற்றிச் சொல்கிற பகுதி வருகிறது.

'நின் புகழ் உருவின கை' என்பது இப்பாடலின் 32வது அடியாகும். எம்பெருமானை, நின் கைகள் நின் புகழின் வடிவத்தை ஒத்திருக்கின்றன. கண்ணபிரானைப் புகழால் சிறந்தவன் என்று கூறுதல் சங்ககால இலக்கிய வழக்கு. 'புகழ் ஒத்தீய இகழ்நர் அடுநனை'' என்பது புறநானூறு. (புறம்: 56.13) 'தன்னை இகழ்வாரை அழிக்கின்ற மணிவண்ணனைப் புகழால் ஒத்திருக்கின்றாய்' என்று ஓர் அரசனை நக்கீரர் கூறும் இடத்தில் வருகிறது. 'புகழ் சிறந்தவன் திருமால் எண்ணிறந்த புகழ் உடைமை போல் எண்ணிறந்த கைகளையும் உடையவனாக இருக்கிறான் அப்பெருமான்' என்று பரிபாடலிற் கூறப்பெறுகிறது.

'எம்பெருமானே! உன்னுடைய ஒரு கை நடுவுநிலை திறம்பிய நலம் இல்லாத கை!' என்று குறை சொல்வார்போல தன்னை அடைந்தோர்க்கு அருளும் நிறையை அடுத்ததாக எடுத்துக் காட்டுகிறார்.

பாற்கடல் கடைந்தபொழுது கடைவதற்கு உதவியாக நின்ற அசுரர்களும் அமிர்தத்தில் பங்கு கேட்டார்கள். அசுரர்கள் அமுதம் உண்டு சாவாத்தன்மை பெற்றால் தேவர்களுக்குத் தீராத்துன்பம் ஆகும் என்று கருதிய பெருமான் அசுரர்களை மனம் திருப்ப மோகினியாக அவதாரம் எடுத்தார். மோகினியாகிய எம்பெருமானது வடிவழகில் மனம் பறிகொடுத்த அசுரர்கள் அவ்வடிவைக் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சியே அவர்கள் இறப்பிற்குக் காரணமாய் அச்சத்தில் கொண்டு விட்டது, அவுணர்களை ஏமாற்றி, 'தேவர்களுக்கு'

அமிர்தத்தைப் பகுத்துக்கொடுத்தபடியால் நடுவு நிலைமையில் தவறிய நலம் இல்லாத ஒரு கையினை உடையவன் நீ என்கிறார்.

நடுவு நிலைமை தவறியவன் என்று தனக்கோர் குறைவரினும் அது பற்றிக் கவலைப்படாது தன் அன்பர்களாய தேவர்களைக் காத்தவன் பெருமான் தன் அன்பர்ககளுக்காகக் குறைகளையும்தான் ஏற்கத்தயாராய் இருக்கிறான் என்று சொல்கிறார் ஆசிரியர்.

*''நகை அச்சாக நல்லமிர்து கலந்த*
*நடுவு நிலை திறம்பிய நறம்இல் ஒருகை''*

என்பது பாடல்.

மோகினிவடிவைக் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சியே அச்சமாக முடிய (தேவர்களுக்கு) நல்ல அமிர்தத்தைப் பகுத்துத் தந்த (இருவர்க்கும் ஒப்ப நீதி செய்யாது ஒருவர்க்கு மட்டும் செய்த) நடுவுநிலை திறம்பிய நலம் (இனிமை) இல்லாத ஒரு கையினை உடையாய் என்று அழைக்கிறார்.

(குறிப்பு: நகை - மகிழ்ச்சி, அச்சு - அச்சம். கலந்த- (தேவர்களுக்கு) பங்கிட்டளித்த, நயம் - இனிமை, நலம்.) செயலாற் சிறந்த பெருமானைக் கைகளால் மிகுதிப்படுத்திக் காட்டும் பகுதியைப் பாருங்கள்.

*இருகை மாஅல்*
*முக்கை முனிவ நாற்கை அண்ணல்*
*ஐங்கைம் மைந்த அறுகை நெடுவேள்*
*எழுகை ஆள எண்கை ஏந்தல்*
*ஒன்பதிற்றுத் தடக்கை மன் பேராள*

*பதிற்றுக்கை மதவலி நூற்றுக்கை ஆற்றல்*
*ஆயிரம் விரித்த கை மாய மள்ள*
*பதினாயிரம் கை முதுமொழி முதல்வ*
*நூறாயிரம் கை ஆறறி கடவுள்*
*அனைத்தும் அல்ல பல அடுக்கல் ஆம்பல்*

*இனைத்து என எண் வரம்பு அறியா யாக்கையை*

(குறிப்பு: முக்கை - மூன்று கை, அறுகை- ஆறு கைகள், ஒன்பதிற்று - ஒன்பது, பதிற்று - பத்து, மள்ள - உடல் வலியால் மிக்கவன், பல அடுக்கல் - பலவாறாக அடுக்கப்பெற்ற, ஆம்பல் - குமுதம் என்கிற எண், இனைத்து - இத்தனை என்று, எண் வரம்பு அறியா - எண்களால் எல்லை காட்டி அறிய முடியாத, யாக்கையை - திருமேனியை உடையாய்.)

ஒரு கை என்று தொடங்கி இலக்கம் என்று எண்ணுக்குரிய நூறாயிரம் என்பது வரை கட்டிப்பார்த்து அதற்கு மேலும் உள்ள குமுதம் என்ற பேர் எண்ணை பல முறை அடுக்கினாலும் இத்தனை என்று கணகிறுதி கட்டமுடியாத கைகளையுடைய திருமேனி என்று எம்பெருமானது பெருந்திருவுருவை எடுத்துக் காட்டினார்.

'இரு கை மாலே' என்று தொடங்கி 'ஆறறி கடவுள்' என்பது வரை எம்பெருமான் தனக்கு என்று ஒரு வடிவும் பெயரும் இன்றி தனக்கு அன்பர்களாயிருக்கிறவர்களை கருதிய வடிவமே வடிவமாகியும் அவர்கள் இட்ட பெயரே பெயராகவும் உடையவன் என்கின்ற தத்துவ நிலையை வடிவ வேற்றுமையும் பெயர் வேற்றுமையும் கொடுத்துச் சொல்லியுள்ளார்.

மால், முனிவன், அண்ணல், ஆளன், ஏந்தல், பேராளன், மதவலி, ஆற்றலன், மாய மன்னன், முதுமொழி(வேத) முதல்வன், ஆறறிகடவுள் என்று அன்பர்கள் எப்பெயர் இட்டாலும் அப்பெயர்க்குப் பொருத்தமானவனாக அப்பெயரே தன் பெயராக உடையவன்.

ஒருகை முதலாக பலவாக அடுக்கப் பெற்ற குமுதம் என்ற எண் அளவாக அடுக்கிய கைகளை உடைய பெருந்திருமேனி உடையான் என்று அன்பர்கள் நினைக்கின்ற வடிவே அவன் வடிவம் என்பதைச் சொன்னார்.

விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் 247வது திருநாமம் 'அனங்க்யேயாய நம:' என்பதாகும். எண்ணிக்கையில் அடங்காதவர். இவர், இன்னார் எனக் குறிப்பிடத் தகுந்த பெயர், குணச்சிறப்பு, எண்ணிக்கை, வடிவம் முதலியவை இல்லை; எண் இறந்த வடிவங்கள் கொண்டவர் என்று வருகிறது. அதுவே, 'எண் வரம்பு அறியா யாக்கையை' என்று பரிபாடலிலும் சொல்லப் பெற்றது.

'என்னுடைய விபூதிகளின் விரிவுக்கு எல்லையே இல்லை' என்று கீதையில் கண்ணன் அர்ச்சுனனுக்குச் சொல்லிய (10-ஆம்

அத்தியாயம், 19-ஆம் சுலோகம் கருத்தையும் இங்கே பொருத்திக் காணலாம்.)

*''யாரும் ஓர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமான்*
*யாரும் ஓர் நிலைமையன் என அறிவெளிய எம்பெருமான்*
*பேரும் ஓர் ஆயிரம் பிறபல உடைய எம்பெருமான்*
*பேரும் ஓர் உருவமும் உளது இல்லை இலது இல்லை பிணக்கே*

- (திருவாய்மொழி 1.3.4)

*''பலபலவே ஆபரணம் வேரும் பல பலவே*
*பலபலவே சோதிவடிவு பண்பு எண்ணில்*
*பலபலவே கண்டு உண்டு கேட்டு உற்று போந்து இன்பம்*
*பலபலவே ஞானமும் பாம்பணை மேலாற்கேயோ''*

- (திருவாய்மொழி 2.5.6)

என்ற நம்மாழ்வார் பாசுரங்களும் அப்பெருமானது வடிவும் பெயரும் கணக்கில் அடங்காமையைத் தெரிவிக்கின்றன.

பாரதத்துள் தூது சென்ற கண்ணன் துரியன் அமைத்த நிலவறையில் விசுவரூபம் காட்டியபோது கொண்ட அப்பெருந்திரு வடிவம் கைகளால் சிறந்து நின்றபடியைப் பேசுவதைக் காணலாம்.

*''மா இருஞாலம் எலாம் வெயில் போய் ஒரு மரகத சோபை உற*
*போய் இரு பாலும் வளைந்து, வளைந்து எதிர் பொருமுனை*
*வெம்படையோடு*
*ஆயிரம் ஆயிரம் அம்கை புறப்பட அண்டரும் மாதவரும்*
*பாயிர நான்மறை பாடி வியந்து பணிந்து புகழ்ந்தனரே''*

(வில்லிபாரதம், கிருஷ்ணன் தூது 205)

என்ற பாடலில் ஆயிரம் ஆயிரம் அங்கை என்று கணக்கிறந்த கைகளைக் காட்டியது போலவே எம்பெருமானுக்கு பரிபாடலும் எண்வரம்பறியாத் திருமேனி தந்து மகிழ்ந்துள்ளது.

தமிழ் எண்களில் இலக்கத்துக்கு மேல் வெள்ளம், தாமரை, ஆம்பல் என்று எண்கள் உண்டு. ஆம்பல் என்பதே குமுதம் என்று சைவ நூல்களில் எண்ணுப் பெயராகக் குறிப்பிடப்படுவது. ஒன்றுக்கு

மேல் எண்களை அடுக்கிக்கொண்டே சென்றால் குமுதம் (ஆம்பல்) என்பதில்தான் முடிகிறது. தொல்காப்பியம் இந்த எண்களை

> *'ஐ, அம்,பல், என வரூஉம் இறுதி*
> *அல் பெயர் எண்ணினும் அவ்வியல் நிலையும்'*

என்ற நூற்பாலில் கூறியுள்ளது. இதில் ஐ-தாமரை, அம்- வெள்ளம். பல் - ஆம்பல், எண்களின் இறுதி நூற்பாலில் கூறப்பெற்றது.

எம்பெருமானது திருக்கைகளால் வடிவ வேற்றுமை சொல்லும் போது ஆம்பல் என்ற எண்ணையே பலவாறு அடுநிரம்பாது என்று சொல்கிற பரிபாடல் 'ஆயிரம் ஆயிரம் அங்கை புறப்பட' என்ற பாரதத்துள் கண்ட விசுவரூபத்தை நினைவூட்டுகிறதல்லவா?

இனி, எம்பெருமானைத் தோத்திரம் செய்கிறார்.

(தொடரும்)

---


ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

**நூல்கள்**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அ த உரைகள் | Cassettes, VCDs |
| 2. திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமண_ன் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. பகவான் ரமண_ன் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

**கீர்த்தனங்கள்**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassette, Audio CD |

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org" or Contact 044-23710110

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 23

1915ம் வருடம் ஆகஸ்ட் மாதம் ஓர் நாள் கோல்கத்தா ஹைகோர்ட்டின் பெரிய லைப்ரரியில், சிறிய, பெரிய வக்கீல்களின் கூட்டமாக இருந்தது. அன்று என்ன விசேஷம்? தாராகிஷோர் என்ற வக்கீலுக்கு அன்று பிரிவு உபசார விழா. ராஸ்பிஹாரிகோஷ் என்ற முதிய வக்கீல் வயதானதின் காரணமாக வக்கீல் தொழிலிலிருந்து விலகப்போவதால் தாராகிஷோர்பாபுவை வக்கீல்களுக்கு தலைவராக அன்று தேர்ந்து எடுக்க வேண்டும் என தீர்மானித்தனர் மற்றைய வக்கீல்கள். ஆனால், தாராகிஷோர்பாபுவின் மனமோ இந்த பணம், பதவி, மானம், கௌரவம், போக விலாஸங்கள் இவற்றிலிருந்து விலகியே இருந்தது. லௌகீகம், ஒன்றுக்கும் பயனற்றது என்பதை அவர் உணர்ந்திருந்தார். ப்ருந்தாவனம் சென்று குருநாதரின் சரணங்களில் தனது ஆத்மாவை சமர்ப்பிக்க அவரது மனத்தில் த்ருட ஸங்கல்பம் ஏற்பட்டது. மற்ற வக்கீல்கள் அவரை ஆலிங்கனம் செய்தும், கை குலுக்கியும் செய்த செயல்களால் அவர் பாதிக்கப்படவே இல்லை.

அப்பொழுது, அங்கு வயதான வக்கீலான ராஸ்பிஹாரிகோஷ் கூட்டத்தை விலக்கிக்கொண்டு வந்தார். தாராகிஷோரிடம் வந்து அவரது சரணதூளியை எடுப்பது போல் குனிந்த அவரிடம், பதறிப் போய் தாராகிஷோர்பாபு, 'இது என்ன! வயதான நீங்கள் என்னிடம் இப்படி நடந்து கொள்கிறீர்கள்' என குரல் தழுதழுக்கக் கேட்டார். உடனே ராஸ்பிஹாரிகோஷ்', 'அப்பா, நான் வயதில் வேண்டுமானால் பெரியவனாக இருக்கலாம். ஆனால், புத்தியிலும் விவேகத்திலும் உன்னைவிட சிறியவன்தான். ஸத்யம், அஸத்யம், வஸ்து, அவஸ்து ஆகியவற்றின் ஞானம் இன்னும் எனக்கு ஏற்படவில்லையே. இவை உனக்கிருப்பதால்தானே நீ உனக்குக் கிடைக்க இருக்கும் மரியாதை, பதவி, பதவி, புகழ், தனம் எல்லாவற்றையும் துச்சமாக உதறிவிட்டு, ப்ருந்தாவனம் செல்வதில்லையே நிலையாக நிற்கிறாய்! நான் இன்னும் இந்த மாயையில்தானே உழன்று கொண்டிருக்கிறேன். நீ தான் பெரியவன்'' என்றார், நா தழுதழுக்க.

தாராகிஷோர்பாபு 1859ம் ஆண்டு, ஜூன் மாதம் 10ந் தேதி வங்காளத்து ஸ்ரீஹட் என்னும் ஜில்லாவைச் சேர்ந்த வாமய் என்னும் கிராமத்தில் தர்மநிஷ்டரான ஜமீந்தார் ஸ்ரீஹரிகிஷோர்சௌத்ரி என்பவருக்கு புத்திரனாகப் பிறந்தார். வசதியுள்ள குடும்பத்தில் ஆசாரசீலராகவும் தர்மநிஷ்டராகவும் வளர்க்கப்பட்டார். எம்.ஏ படிப்பு முடித்து ஆசிரியர் வேலையில் அமர்ந்தார். பிறகு சட்டப்படிப்பு முடித்து வக்கீல் தொழிலை மேற்கொண்டார். படிப்படியாக முன்னேறி கல்கத்தா ஹைகோர்ட் வக்கீல்களுள் முதன்மையானவராக திகழ்ந்தார்.

அவர் வக்கீல் தொழிலில் மட்டும் முதன்மையானவராகத் திகழவில்லை. வங்காளத்து சமூஹவாழ்விலும், அரசியல், மக்கள் நலவாழ்வு, சமூஹ விரோதிகள் ஒழிப்பு சங்கம், ப்ரஹ்ம சமாஜ் நடவடிக்கைகள் என்று பலதுறைகளிலும் தனக்கென்று ஒரு தனிஸ்தானத்தை ஸ்தாபித்துக்கொண்டிருந்தார். இத்தனை இருந்தும் அவர் உலக நடப்புகளிலிருந்து தன்னை தனியாக வைத்துக் கொள்வதிலும் நிபுணராக இருந்தார். தினமும், பஜனை செய்வது என்பதை தனது சாதனையாக வைத்துக்கொண்டிருந்தார். வக்கீல் தொழிலோ, க்ருஹஸ்தாச்ரமோ அவரது ஆன்மீக சாதனத்துக்கு தடையாக இருக்கவே இல்லை. சொல்லப்போனால் அவரது ஆன்மீக பலத்தால்தான் அவர் எல்லா துறைகளிலும் பிரகாசித்தார். அவர் பொய் வழக்குகளை ஏற்றுக்கொள்ள மாட்டார். எடுத்துக்கொண்ட வழக்குகளில் நிச்சயம் வெற்றி பெறுவார். இதனாலேயே எதிர்தரப்பு வக்கீல்கள் கூட தங்களது கட்சிக்காரர்களிடம் உங்களுடைய கேஸ் பலமாக இருந்தாலும், சாட்சியங்கள் போதுமானதாக இருந்தாலும், தாராகிஷோர்பாபு எதிர்தரப்பில் இருப்பதால் இந்த வழக்கு பற்றி நிச்சயமாக ஏதும் சொல்ல முடியாது. ஏனென்றால், அவரது அத்யாதிமிகமான மனோபலம் அப்பேர்ப்பட்டது என்று கூறுவார்களாம்.

தாராகிஷோர் வீட்டில் எப்போதும் பந்துக்கள் கூட்டமிருக்கும். சமூஹ சேவை செய்வதிலேயே அவர் தனது வருவாயை செலவு செய்தார். பசித்தவர்கள், சமூஹத்தில் கஷ்டப்பட்டவர்கள் ஆகியோர்களுக்கு அவரது வீடே ஆச்ரயமாக இருந்தது. பணம் சேர்த்து வைப்பதையே அறியாதவர் தாராகிஷோர். நிறைய

சம்பாதித்தார். அத்தனையும் பொது வாழ்வு நலனுக்காக செலவு செய்தார்.

தாராகிஷோர்பாபு யோக சாதனைகளையும் பயின்றார். இதனால் அவருக்கு பல சக்திகளும் ஏற்பட்டன. அவரே சொல்வார், ''யோக சக்தியால் நான் பலரின் வ்யாதிகளை என் பார்வையாலேயே குணப்படுத்தியுள்ளேன்''. ஹிஸ்டீரியா போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அனேகர் என்னைப் பார்த்த மாத்திரத்திலேயே குணமடைந்துள்ளார்கள். என் ஸ்பர்சத்தால் **பா**வ ஆவேசம் ஏற்பட்டு மூர்ச்சை அடைந்துள்ளார்கள். ஆனால், இந்த சக்திகளால் எனக்கு ஆத்ம ஞானமோ, ப்ரஹ்ம ஞானமோ உண்டாகவில்லை. எனது மனோபீஷ்டம் இந்த சக்திகளால் நிறைவேறாது என்று தெரிந்து கொண்டேன். இதற்கு ஒரு ப்ரஹ்ம ஞானியான குரு அவச்யம் தேவை. எனவே, நான் ஸத்குருவை அடைவதற்காக எப்போதும் ஏங்கிக்கொண்டு இருக்கிறேன்.

தாராகிஷோர், தினமும் கங்கையில் நீராடுவார். கங்கைக் கரையில் அமர்ந்துகொண்டு நெடுநேரம் த்யானம், ஜபம் செய்வார். ஒரு நாள், இப்படி கரையில் அமர்ந்துகொண்டு மனமுருகி கங்கையிடம், ''த்ரிதாப நாசினியே! கலிகலுஷஹாரிணியே! அம்மா! நான் என்ன த்ரிலோக **பா**வனியான உனது ப்ரவாஹத்தால் கூட சுத்தமாகாத பாபியா என்ன? ஏன் இன்னும் எனக்கு சத்குரு கிடைக்கவில்லை?'' என்று ப்ரார்த்தித்துக்கொண்டார். அப்போது அவருக்கு ஒரு அலௌகீகமான காட்சி ஏற்பட்டது.

அவரே இது பற்றி கூறுகிறார் - ''என் கண்ணெதிரில் மூலகங்கோத்ரி, அந்த கோமுகிஸ்தானம் - எங்கிருந்து கங்கை உற்பத்தியாகிறதோ அந்த இடம் அங்கு அமர்ந்திருக்கும் ஸ்ரீ உமாதேவி, மஹேச்வர் ஆகிய அனைத்தும் தெளிவாக புலப்பட்டது. மஹேச்வரர் எனக்கு ஏகாக்ஷர பீஜ மந்திரத்தை அளித்து, ''இந்த மந்திரத்தை ஜபிப்பதால் உனக்கு ஸத்குரு ப்ராப்தி ஏற்படும்'' என்றார்.

இந்த உபதேசத்தை ஏற்று ஜபித்து வந்தார் தாராகிஷோர். மூன்று வருடத்திற்குள் அவருக்கு ஸத்குரு ப்ராப்தி ஏற்பட்டது. ஒரு ஆஷாட மாத இரவு அவர் ஸாதனா ரூபமான பஜனை முடிந்து மேல்

மாடியில் உறங்கிக்கொண்டிருந்தார். திடீரென்று உறக்கம் கலைந்து எழுந்து உட்கார்ந்துகொண்டார். அப்பொழுது ஆகாய மார்கமாக வ்ருந்தாவனத்து ஸ்ரீராமதாஸ் கடியாபாபாவின் ஜோதிர்மயமான ஒளிரூபம் அவரை நோக்கி வந்தது. அவரது எதிரில் நின்று பாபா அன்புடன் அவருக்கு ஆறுதல் மொழிகள் கூறி காதில் மந்திர ப்ரதானம் செய்துவிட்டு மறுபடி ஆகாயமார்கமாக சென்றுவிட்டார்.

தாராகிஷோர் இதற்கு முன்பு அனேகம் முறை வ்ருந்தாவனம் சென்று ராமதாஸ்கடியாபாபாவை தரிசனம் செய்துள்ளார். ஆனால், அவருடைய மனதில் கடியாபாபாவைப் பற்றி அனேக சந்தேகங்கள் இருந்தன. இந்த முறை பாபா அந்தர்தானமானவுடன் அவர் உபதேசித்த மந்திரம் உள்ளே ப்ரவேசித்து அவரது சந்தேகங்கள் அனைத்தும் அகன்றுவிட்டதை உணர்ந்தார். ச்ராவண மாதம் அவரும் அவரது பத்னியும் மறுபடி ப்ருந்தாவனம் சென்றனர். இருவரும் கடியாபாபாவை வணங்கியவுடன், அவர் மூலமாக மந்த்ரோபதேசம் பெற்றார். இது, அவர் அலௌகீகமாக அவர் வீட்டு மாடியில் கடியாபாபாவிடம் பெற்ற அதே மந்திரம்தான். பிறகு கல்கத்தா திரும்பி வந்து தனது ஆன்மீக வாழ்வைத் தொடர்ந்தார்.

குருவின் க்ருபையால் தனது பஜனை சாதனையில் தீவிரமாக இருந்தார். பல விபத்துக்களிலிருந்தும் ரக்ஷிக்கப்பட்டார். குரு அவருக்கு இரவு வேளையில் விழித்திருந்து பஜனை செய்ய உத்தரவிட்டிருந்தார். ஒருநாள் இரவு அவர் தன்னை அறியாமல் தூங்கிவிட்டார். குரு, சூக்ஷ்ம ரூபத்தில் அங்கு வந்து அவர் மீது ஒரு சிறிய செங்கல்லை எறிந்து எழுப்பிவிட்டு பஜனை செய்யப் பணித்தார். அன்றிலிருந்து அவர் விழிப்புடன் இருந்து பஜனை செய்யலானார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

Hell or heaven, be with me

**— Bhagavan Yogi Ramsuratkumar**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 107

*தெய்வமென்றுன்னை சாரவே என்னை*
*சேரவொழித்தாய் அருணாசலா*

பித்ருக்களை திருப்தி செய்து, பித்ருக்களின் அனுக்ரஹத்தை பிரதானமாகக்கொண்டு வாழ்கிறவர்கள் இன்றும் உள்ளனர். இவ்வாறு உள்ளோர் பல காலமாய் வாழ்ந்து வருகின்றனர். (இறந்த பின்னர், பித்ரு உலகங்களில் வாழும் நமது முன்னோர்களை பித்ருக்கள் எனப்படுவர்). ஆவிகள், பூதங்கள் இவைகளை பிடித்து வைத்துக்கொண்டு, அதன்மூலம் அல்பமான சித்திகளைப் பெற்று, ''அருள்வாக்கு சொல்கிறேன், குறி சொல்கிறேன்'' என்று வாழ்பவர்களும் உலகில் உள்ளனர். இதுவெல்லாம் தெய்வத்தை உபாஸனை செய்வதில் சேராது.

தெய்வத்தை உபாஸனை செய்பவர்களிலும் சங்கிலி கருப்பன், முனியாண்டி என்று கிராமாந்திர தேவதைகளை பூஜிப்பவர்களும் உள்ளனர். இந்த தெய்வங்களை பூஜிப்பதால் மோக்ஷம் கிட்டாது. வேதத்தில் 'ரத்னத்ரயம்' என்று மூன்றுவிதமான உபாஸனை முறைகள் மிகவும் பிரஸித்தியாக பேசப்படுகிறது. இதுவே சைவம், வைணவம், சாக்தம் எனப்படும். ஆதிசங்கர பகவத்பாதர் இதனுடன் மேலும் மூன்று உபாஸனை முறைகளை சேர்த்து ஷண்மத ஸ்தாபனம் செய்தார். அவை காணாபத்யம் (கணபதியை உபாஸிப்பது), கௌமாரம் (முருகனை பூஜிப்பது), ஆதித்யம்(சூரியநாராயணனை உபாஸிப்பது) ஆகும்.

இப்படி தெய்வத்தைத் தேர்ந்தெடுப்பதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில், உபாஸனை செய்யப்படும் தெய்வம் மோக்ஷத்தை கொடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அப்படி இல்லையெனில், அந்த உபாஸனையால் யாதொரு பயனும் இல்லை.

ஒரு தெய்வத்தை, அதற்கேற்ற பலவிதமான வழிமுறைகளில் பூஜை, ஆராதனை செய்து வழிபடுகிறோம். நாம் உபாசனை செய்யும்

தெய்வத்தை பற்றிய சரித்திரங்களை ச்ரவணம் (கேட்பது) செய்கிறோம். அந்த தெய்வத்தின் பலவிதமான குணங்களை நினைக்கிறோம். அந்த தெய்வத்தைப் போற்றி பலவிதமாய் துதிக்கிறோம். பலவிதமாய் கீர்த்தனங்களாகவும் அத்தெய்வத்தை பாடியும் வருகிறோம். இப்படி அனுதினமும், தொடர்ந்து சிந்தித்து வர, வர என்னவாகுமென்றால், எந்த தெய்வத்தை உபாஸனை செய்தோமோ அத்தெய்வத்தின் அனைத்து குணங்களும் நம்மிடம் வர ஆரம்பிக்கும். அதாவது, அந்த தெய்வத்தின் ஸ்வரூபமாகவே ஆகிவிடுவோம். அதனால்தான், மோக்ஷம் தர இயலாத தேவதையை உபாஸனை செய்வது வீண். பித்ருக்களையும், துர்தேவதைகளையும் உபாஸிப்பவன் அந்தந்த தேவதைகளின் உலகங்களை அடைகிறானே ஒழிய, ஒருநாளும் மோக்ஷத்தை அடைவதில்லை.

ஆதலால், ஸாத்வீகமான தேவதையை உபாஸிக்கவேண்டும். அதிலும் ஸாத்வீகமான உபாஸனை தேவை. தெய்வத்திடம் செய்யும் பக்தி ராஜஸமாகவோ தாமஸிகமாகவோ இருந்துவிட்டால் அதுவும் வீணே. சாந்த **பா**வத்தில் பக்தி செய்ய வேண்டும். மோக்ஷத்தை வேண்டி உபாஸிப்பதே சாந்த பாவம். ராஜஸ, தாமஸிகமாக உபாஸித்தவர்கள் யாரும் மோக்ஷமடைந்ததில்லை. இதை நமது புராண, இதிஹாஸங்களில் உள்ள பல சம்பவங்கள் நிரூபிக்கின்றன. அதனால்தான் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளும், ''பக்தியை எனக்கு கொடு. அதிலும் ஸாத்வீகமான பக்தியை பிச்சையாக கொடு'' என ப்ரார்த்திக்கிறார்.

இப்படி ஸாத்வீகமாக தெய்வத்தை உபாஸிப்பதால் ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், சாயுஜ்யம் என்பவை கிடைக்கும். அதாவது, எந்த தெய்வத்தை உபாஸித்தோமோ அந்த தெய்வம் வசிக்கும் க்ஷேத்ரங்களில் வாசம் கிட்டும். ஸ்ரீ ரங்கநாதரை வழிபடுபவருக்கு ஸ்ரீரங்கவாஸம் லபிக்கும். இதுவே ஸாலோக்யம். எந்த குருநாதரை தீவிரமாகவும், திடமாகவும் உபாஸிக்கிறோமோ அந்த குருநாதரின் தரிசனம் அடிக்கடி கிட்டும். அவர் அருளினால் அவரின் சரண சாயலில் வாழும் பேறும் கிட்டும். இவை இப்பூவுலகிலேயே கிடைப்பது. தொடர்ந்து உபாஸிப்பதால் அந்த தெய்வத்தின் ஸ்வரூபமாகிவிடுவதால், அந்த தெய்வத்திற்கு எது பிடிக்குமோ, அதுவே இவனுக்கும்

பிடிக்கும். எது பிடிக்காதோ அது இவனுக்கும் பிடிக்காது. உதாரணமாக ராமரை பூஜிப்பவர், சதா பித்ரு பக்தி செய்வதும், சத்யசந்தராய் இருப்பதும், 'தர்மம், தர்மமென்று' இருப்பதுமாய் ஆகிவிடுவார். இதுபோல், க்ருஷ்ணனை வணங்குவோருக்கு க்ருஷ்ண பரமாத்மாவின் குணங்கள் வரும். சுருங்கச் சொல்லின், அந்த தெய்வத்தின் ரூபம், குணம், நடை, உடை, பாவனை அனைத்தும் இதிஹாஸ, புராணங்களில் எப்படி வர்ணித்துள்ளதோ அப்படியே ஆகிவிடும். இவ்வாழ்விற்குப்பின் எந்த தெய்வத்தை பூஜித்தோமோ, அந்த தெய்வத்தின் உலகை அடைகிறோம். இப்படி நடந்தால்தான் ஒருவன் செய்யும் உபாஸனை பலித்தது ஆகும். இல்லை எனில் உபாஸனை சரியல்ல என்றாகிவிடும்.

மேலும் இப்படி சிவனையோ, க்ருஷ்ணனையோ, குருவையோ பூஜித்து, த்யானித்து வருகையில், நம்மிடமிருந்து ஒரு Vibration வருகிறது. இது இந்த cosmic-ல் பரவி நம்மைப்போலவே Vibration உள்ளோரை நம்மிடம் கொண்டு சேர்க்கிறது. அவர்களின் சங்கம் (நட்பு) கிட்டும். உதாரணமாய் நாம் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது அருகில் அமரும் ஒருவர், அருணாச்சலேஸ்வரனின் பக்தராய் இருப்பார். அவர் நம்மிடம் பகவான் ரமண மஹரிஷிகளைப் பற்றி பேசுவார். நமக்கே இது ஆச்சரியமாய் இருக்கும். யாரோ ஒருவர் நம்மிடம் ஒரு புத்தகம் கொடுப்பார். அது பகவான் பகவான் ரமண மஹரிஷிகளைப் பற்றியதாக இருக்கும். இப்படி நடப்பதற்குக் காரணம், ஒருவர் செய்யும் உபாஸனைதான். அதனாலேதான் இந்த Entire cosmicம் மாறிவிடுகிறது. அப்படி நடந்தால் நமது பக்தி சரி என்று அனுமானிக்கலாம். ஆக, பக்தர்களின் ஸாமீப்யம் கிடைக்கிறது. இப்படி எல்லோரும் ஸாத்வீகமான தெய்வத்தையும், உபாஸிக்கும் முறையும் தெரிந்து பக்தி செய்ய முயற்சிக்க, இங்கு ரமண பகவானுக்கு நடந்ததென்னவோ வேறு. ''தெய்வமென்றுன்னை-'' அருணாசலேஸ்வரா! ப்ரும்ம ஸ்வரூபமான உனது குணங்களை தெரிந்துகொள்ளாமலேயே நான் உன்னை அடைந்து விட்டேனே! என்கிறார்.

பலர் ஸத்ஸங்கம், குரு வேண்டும் என்று தேடுகின்றனர். அவர்களுக்கு கிடைப்பதில்லை. சிலருக்கு யாதொரு பிரயத்னமுமின்றி

ஒரு பெரிய மஹாத்மாவை குருவாய் அடைந்துவிடுகின்றனர். தமது குரு ஒரு பெரிய ஞானி என்று அறியாமலும் அடைகின்றனர். இதற்கு தெய்வகிருபையே காரணம். இங்கு, ''அருணாசலேஸ்வரா! நீ ஸங்கல்பம் (முடிவு) செய்து என்னை ஆகர்ஷித்ததால் உன்னை வந்து அடைந்தேன்'' என்கிறார் ரமணபகவான். குருவின் அனுக்ரஹம் இன்றியோ, தெய்வத்தின் அனுக்ரஹமின்றியோ ஒரு குரு கிடைப்பது என்பது நடக்காது.

(தொடரும்)

## அறிவிப்பு!

நம்முடைய ஸ்வாமிஜி அவர்களால், 1995-ல் ஸ்தாபிக்கப்பட்டு, ஸாந்தீபனி குருகுலம் வேதபாடசாலை இன்றளவும், மதுரபுரி ஆஸ்ரம வளாகத்திலும், சென்னையில் உள்ள ஆலப்பாக்கத்திலும் நடந்து வருகின்றது. நம்முடைய பாரததேசத்தின் ஜீவனாக இருக்கக்கூடிய வேதத்தைக் காப்பாற்றுவதில் எல்லோருடைய பங்கும் இருக்கவேண்டும் என்பது ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் விருப்பம். அதன்படி, ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் வீட்டிலுள்ள ஸ்வாமி படத்தின் முன்பாக ஒரு உண்டியல் வைக்கவும். அதன்மேல் **''வேத நிதி''** என்று எழுதி தினமும் அதில் ஒரு ரூபாய் போட்டு வரவும். ஒவ்வொரு வருடமும், டிசம்பர் 31-ந் தேதி அதில் சேர்ந்த பணத்தை எடுத்து **ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் (Sri Sandeepani Gurukula trust)** என்ற பெயருக்கு DD எடுத்து Regd. Office: Premika Bhavanam, 2, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**- Trustees**

குடந்தையில் நடந்த சோக சம்பவத்தில் கருகிய அன்றலர்ந்த மலர்களுக்காக நம்முடைய சத்சங்கத்து அன்பர்களால் பல இடங்களில் நாமஜபம் செய்யப்பட்டது.

**மங்களானி பவந்து**